மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரினைப் போல அல்லது இராமாயணத்தில் இராமர் இலங்கைக்கு மேற்கொண்ட படையெழுச்சியைப் போல, கிறிஸ்துவுக்கு பிற்பட்ட முதல் ஆயிரம் ஆண்டுப் பகுதியில் நிகழ்ந்த ஸ்கன்டினேவியக் கடல்வீரர்களின் தாக்குதல்களினால் ஏற்பட்ட வரலாற்றுப் பின்னணியுமுடைய கலேவலாவின் போர் நடவடிக்கைகள் இப்பாடல்களின் முதுகெலும்பாக அமைந்தன. ஆனால் எக்காரணம் கொண்டும் இப்பாடல்கள் போர்க் கருப்பொருளை மட்டும் அடிப்படையாகக் கொண்டவையல்ல. இந்தியாவின் காவியங்களில் வரும் சுயம்வரங்களைப் போல, மாப்பிள்ளையாகப் போகிறவர் பெண்ணை நயந்து பெறுதலும் மக்கள் விரும்பும் ஒரு காவியக் கருவாகும். விவசாயம் (படம் 2), கால்நடை வைத்திருத்தல் (வர்ணப் படம் 6), விவாகங்கள், மருத்துவச் சடங்குகள் போன்ற எல்லா வகையான கிராமீய வழக்கங்கள், அல்லது இளம் மக்களின் பொழுதுபோக்குகள் என்பவற்றோடு உலக நோக்கும் மதமும் கூட உட்பட்ட நாளாந்த வாழ்க்கையின் பல்வேறு பண்புகள் பற்றியும் கலேவலா கூறுகிறது. பண்டைய தமிழரின் கலாசாரத்தின் எல்லாப் பக்கங்களையும் சிலப்பதிகாரத்தில் அளித்திருப்பது போல, பண்டைய பின்லாந்தியரின் கலாசாரத்தின் சிறந்த விரிவான வர்ணனையைக் கலேவலாவில் காணலாம். (இருப்பினும் தமிழ் மக்களுடைய நேர்த்தி நுட்பமானதும் பெருமளவில் நகரப் பண்பானதுமான கலாசாரத்திலும் பார்க்க, பின்லாந்தியரின் கலாசாரம் முற்றிலும் கிராமீயமானதும் மிகவும் எளிமையானதுமாகும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.) யூராலிக் மொழிகள் பேசும் மக்களின் மிகப் பழைய மதம் அனேகமாக 'ஷமானிசம்' (Shamanism) ஆக இருந்திருக்கலாம்; ஆனால் பால்டிக்-பின்லாந்தியர் தொடர்பு கொண்டிருந்த பிற மக்களின் விளைவாட்சிக்கு உட்பட்ட மதமே கலேவலாவில் பிரதிபலிக்கிறது. உண்மையில், கலேவலாவில் பல உலக நோக்குகளைக் காணலாம்; அவை உலகப் படைப்புப் பற்றிய பாடல்கள், பெரிய சிந்துரம் (great oak) வீழ்த்தப் படுதல் (இது பற்றிக் கீழே கூறப்படுகிறது), ஸ்கன்டினேவியக் கடல்வீரர்களின் சாகசச் செயல்கள் பற்றியும் கிறிஸ்துவம் பற்றியும் பரம்பரைக் கதைகள், விவசாயிகள், மந்திரக்காரர்கள், மந்திரக்காரிகளின் பாடல்கள் ஆகியவை அடங்கிய கற்காலம் வரை பின்நோக்கிச் செல்லக்கூடிய பௌராணிகக் கருத்துகளாகும்.

## மாபெரும் சிந்தூரமும், அது வீழ்தலும்

கலேவலாவின் உள்ளடக்கத்துக்கு ஓர் உதாரணமாக அதன் இரண்டாவது பாடலைச் சற்று விரிவாகக் கூற விரும்புகிறேன்; முதலாவது பாடலில் வரும் உலகம் படைக்கப்பட்ட புராணக் கதையைத் தொடர்ந்து இப்பாடல் வருகிறது. ஆதியில் தோன்றிய சமுத்திரத்தில் எழுந்த தீவுகளிலும் தலைநிலப் பரப்பிலும் மரங்களை விதைத்து உண்டாக்க விரும்புகிறான் பேரறிவு படைத்த ஞானியான வைனாமொயினன். மண்வளத்தைக் காக்கும் தேவசக்தியான சம்ஸா பெல்லர்வொயினனால் இது நடைபெறுகிறது. சிந்தூர மரத்தைத் தவிர மற்ற எல்லா விதைகளும் முளைத்துச் செழிக்கின்றன. கடலின் உபதேவதைகள் கொஞ்ச வைக்கோலை எரித்து, அதன் சாம்பர்மேல் சிந்தூர மரத்தின் வித்து விழுந்த பின்னர் தான் சிந்தூரம் முளைக்கத் தொடங்குகிறது. ஆனால் அது ஒரு மாபெரும் விருட்சமாக வானம் வரை வளர்ந்து சூரியனும் சந்திரனும் ஒளிர்வதைத் தடுக்கிறது. முழு உலகமே இருளில் அமிழ்கிறது. வைனாமொயினன் இந்த இராட்சச மரத்தை வீழ்த்தக் கூடிய ஒருவனைத் தேடிக் கிடைக்காமல், கடைசியில் தனது தாயான கடல்மகளை வணங்குகிறான். அவள் பெருவிரல் அளவு நீளமான ஒரு சின்னஞ்சிறிய மனிதனை அனுப்புகிறாள்; விஷ்ணு பகவான் குறள் வடிவில் அவதாரம் எடுத்த போது பலி என்னும் அரக்கன் அவரைத் தவறாக நினைத்ததைபோல, இந்தக் குறள் மனிதனையும் பார்த்து வைனாமொயினன் சிரித்து ஏளனம் செய்கிறான். ஆயினும், வாமனனைப் போல இந்தச் சின்னஞ்சிறிய செப்பு மனிதனும் திடீரென மாபெரும் அளவு உருவத்தைப் பெற்று, அந்தப் பயங்கர மரத்தைக் கோடாரியால் மும்முறை தாக்கி வீழ்த்துகிறான்; (இந்தத் தோற்றம் சென்னிறமான உதயக்கால சூரியனின் உருவகமே என்பதில் சந்தேகமில்லை). இயற்கை இப்பொழுது இருள் என்னும் கேட்டிலிருந்து விடுபட்டு மலர்ச்சியடையத் தொடங்குகிறது. (தேவன் இந்திரன் விருத்திராசுரனைக் கொன்று, இந்த அரக்கன் தடுத்து வைத்திருந்த மழை முகில்களை எல்லாம் விடுவித்து உலகத்துக்கு விடுதலை தந்ததை இங்கு நினைவு கூறலாம்). வீழ்ந்த சிந்தூர மரத்தின் துண்டுகள் உலகெல்லாம் இன்பத்தைப் பரப்புகிறது. இதன் நோக்கம் மந்திர சக்தி வாய்ந்த, புனிதமான

சோலை மத்தியில் சிந்தூரத்தைச் சுற்றி 'பீர்' என்னும் பானம் வடிக்கும் சடங்குகள், சிந்தூர மரத்தில் 'பீர்'ப் பானக் கிண்ணங்கள் இயற்றுதல் போன்றவற்றைத் தொடர்புபடுத்துவதாகத் தெரிகிறது. பாடலின் ஏனைய பகுதி ஆதிகாலத்தில் சாதாரணமாகக் கையாளப்பட்ட காடுகளை எரித்தழித்துச் செய்த விவசாயம் பற்றிக் கூறுகிறது; இது இப்பொழுது வழக்கிலில்லை; (சரியாகச் சொல்லப் போனால் தடைசெய்யப்பட்டுள்ளது); அதாவது சாம்பலில் விதைகளை விதைப்பதற்கு முன்னால் பெரும் பிரதேசத்தில் உள்ள எல்லா மரங்களையும் முற்றாக எரிப்பது (படம் 2). எனினும், குயில் வந்து அமர்வதற்காக வைனாமொயினன் ஒரு மிலாறு மரத்தைப் பாதுகாக்கிறான்.

## கலேவலா

கலேவலா Kalevala என்னும் பெயர் பின்னிஷ் மொழியில் 'இடம்' என்பதைக் குறிப்பிடும் -la என்னும் பெயர் விகுதியில் முடிவடைகிறது. 'கலேவா' என்னும் எஞ்சிய அடி பின்லாந்தியரின் சந்ததியின் ஆதிமுதல்வரின் பெயராகக் கருதப்படுகிறது. இவருக்கு பன்னிரண்டு ஆண் மக்கள் இருந்தனர்; கலேவலாவின் நாயகர்களான வைனாமொயினனும் இல்மரினனும் இவர்களில் அடங்குவர். பின்னிஷ் மொழியில் 'கலேவா' என்பது விண்மீன்களின் பல பெயர்களாக வருகிறது; [மான்தலை விண்மீன்குழுவை (the belt of orion) 'கலேவாவின் வாள்' என்று அழைப்பர்.] இடியேறு போன்ற வானுலகக் காட்சியை 'கலேவலாவின் நெருப்பு' என்பர். கலேவாவின் ஆண் மக்களை, வயல்களை உண்டாக்குவதற்காக (மரங்களை எரித்துச்) சுட்டழித்த காட்டு விவசாயத்துறையின் அதிசக்தி வாய்ந்த பூதங்கள் என்பர். கலேவா என்னும் பெயரின் சொல்லாக்க விளக்கம் உறுதியாக சொல்வதற்கில்லை. 'கொல்லன்' என்னும் பொருள் வரும் kalvis என்ற லித்துவேனியன் சொல்லும் பழைய பால்டிக் கொல்வேலைத் தெய்வம் kalevias என்பதும் தான் தொடர்புபடுத்தக்கூடிய மிக நெருங்கிய விளக்கமாகும்.

### இல்மரினன் என்னும் தேவ கொல்லன்

கலேவலாவின் முக்கிய நாயகர்களில் ஒருவனான இல்மரினன் கொல்லன் என்னும் தனிச் சிறப்புடையவன். இவனுடைய முக்கிய அருஞ்செயல்களில் சில: இரும்பைப் படிமானமாக்குதல், சம்போ என்னும் அற்புத ஆலையை உலையில் உருவாக்குதல் (வர்ணப்படம் 2), பாம்புகள் நிறைந்த வயலை உழுதல் (வர்ணப்படம் 5), தங்கத்தில் ஒரு மங்கையை இயற்றுதல், விண்ணுலக ஒளிகளை வடநிலப் பாறைகளிலிருந்து விடுவித்தல் என்பனவாம். பழைய நாடோடிப் பாடல்களின்படி, இல்மரினன் சம்போவைப் போலவே விண்ணுலகின் கவிகை விமானத்தையும் செய்திருக்கிறான். லாப்புலாந்திலிருந்து கிடைத்த 1692ம் காலத்தைய 'ஷமானிஸ' மதகுருவின் முரசின்படி (drum) இல்மரிஸ் என்னும் மன்புனைவான தெய்வம் காற்றையும் காற்றுவீச்சையும் ஒழுங்கிசைவுப்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. பின்னிஷ் மொழியில் ilma என்னும் சொல்லுக்குக் காற்று என்று பொருள். ரஷ்ஷியாவில் வாழும் 'வொத்யாக்ஸ்' (Votyaks) இனத்தவர் இன்னமும் 'இன்மர்' Inmar அல்லது 'இல்மெர்' Ilmer என்னும் விண்ணுக்குரிய தெய்வத்தை வழிபடுகின்றனர்.

## வைனாமொயினனும் பாடல்களின் சக்தியும்

கலேவலாவின் முக்கிய நாயகனான வைனாமொயினன் மனிதச் சிறப்பு தெய்வச் சிறப்பு ஆகிய இரண்டும் கொண்ட ஒரு பாத்திரமாகும். புராணத்துறைத் தனிச்சிறப்புகளின் அடிப்படையில் லொண்ரொத் (Lo*nnrot) பின்னதற்கே சாதகமாக இருக்கிறார் என்று தெரிகிறது. முதலாவது பாடலில் வைனாமொயினனே ஆதி காலத்துக் கடலில் பிறந்த படைப்புக் கடவுளாகிறான்; அவனுடைய பெயர் 'அகன்று ஆழமானதும் மெதுவாகப் பாய்வதுமான ஆறு' என்னும் பொருளில் உள்ள va*ina* என்னும் சொல்லில் இருந்து வந்ததால், ஆதியில் தண்ணீரோடு தொடர்புடைய கடவுளாகவும் இந்தியாவின் புராணங்களில் வரும் வருணனைப் போலவும் இருந்திருக்கலாம் என்று கருதவைக்கிறது. வைனாமொயினன் ஒரு கலாசார நாயகனாகவும் கருதப்படுகிறான்; ஒரு படகை முதலில் கட்டியவன் அவனே; ஒரு யாழை முதலில் செய்து இயற்கை முழுவதையும் தனது இசையால் மயக்கியவனும் அவனே. வைனாமொயினனின் பண்பை விளக்கும் சிறப்புப் பெயர்கள் அவனுடைய வயதையும் அறிவையும் அழுத்திக் கூறுகின்றன; அவன் உலகியலுக்கு அப்பாற்பட்ட அறிவு படைத்த ஒரு வல்லமைமிக்க ஞானி; மந்திரப் பாடல்களாலும் சக்தி வாய்ந்த சொற்களாலும் தனது அருஞ்செயல்களை நிகழ்த்துபவன். ஒரு பழைய இறந்த பூதத்திடம் தேவையான மந்திரச் சொற்களைப்

பெறுவதற்காக ஒரு மந்திர சூனிய மதகுருவைப்போல பாதாள உலகத்துக்குச் செல்பவன். வைனாமொயினன் ஒரு போர்வீரனைப் போல அடிக்கடி காட்சியளித்தாலும், அவனுடைய போர்வீரனுக்குரிய செயலாற்றல் அவனுடைய ஞானத்தின் தேர்ச்சியளவுக்குப் பாராட்டப்படவில்லை. இதன் தொடர்பாக, நாயகன் வீரன் என்பதைக் குறிக்கும் பின்னிஷ் சொல் sankari, பாடகன் என்னும் பொருளுள்ள பழைய நோர்டிக் (Old Nordic) சொல்லான sangare வரை பின் நோக்கிச் செல்கிறதைக் கவனித்தல் மனதில் ஆர்வத்தை ஏற்படுத்தும். வைனாமொயினனின் சக்தி வாய்ந்த சொற்கள் எதிராளியைச் சேற்றில் அமிழ வைக்கிறது (முகப்பு படத்துக்கான விளக்கம் பார்க்க). வைனாமொயினனின் பாத்திரப் பண்பை எளிமையான முறைகளில் தெரிந்துக் கொள்ளப் பல்வேறு கல்விமான்கள் எடுத்த முயற்சிகள் மிகவும் வித்தியாசமான மாறுபாடான முடிவுகளையே தந்தன. கலேவலாவில் வரும் வேறு பல பாத்திரங்களுக்கும் இது பொருந்தும். இந்தியாவின் காவியங்களின் ஆய்விலும் இத்தகைய நிலமை நிகழ்வதைக் காணலாம்: உதாரணமாக, ஏற்கனவே முற்காலத்தில் இருந்த பல்வேறு தேவர்களின் மறுபிறப்பே பஞ்சபாண்டவர்கள் என்று கூறப்பட்ட அதே வேளையில், வேறு கல்விமான்கள் அவர்களை வரலாற்று மனித நாயகர்கள் என்று கருதுகிறார்கள்.

## எலியாஸ் லொண்ரொத்

கலேவலா பழைய நாடோடிப் பாடல்களின் அடிப்படையில் அமைந்திருந்தாலும், அதன் அமைப்பில் அதன் தொகுப்பாசிரியருக்கும் கணிசமான பங்கு உண்டு என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இது எலியாஸ் லொண்ரொத்தின் (Elias Lo*nnrot, 1802-18884) ஆக்கமாகவே நிலைத்திருக்கிறது; ஒரு கிராமத்து ஏழைத் தையற்காரரின் மகனான இவர், ஒரு மருத்துவராக வாழ்க்கையைத் தொடங்கி, சிறந்த மிகப் பெரிய அளவிலான கலாசாரச் செயல்கள் முலமாகப் பின்னிஷ் மொழியின் பேராசிரியர் ஆனார். பதினொரு நெடுந்தூரப் பயணங்களில், பெரும்பாலும் தெருக்களே இல்லாத காட்டுப் பிரதேசங்கள் வழியாக, இருபதினாயிரம் கிலோ மீட்டர் தூரம் கால்நடையாகவே சென்று, கலேவலா நாட்டுப் பாடல்கள் அமைப்பில் உள்ள 65,000 பாடல் அடிகளை லொண்ரொத் சேகரித்தார். வைனாமொயினன் தொடர்பான பாடல்கள் பற்றிய முனைவர் பட்டத்துக்கான ஆய்வுக்குப் பின்னர் (1822), "பழைய கலேவலா" என்று அழைக்கப்படும் கலேவலாவின் முதலாவது பதிப்பை 1835ல் வெளியிட்டார். இரண்டாவதும் முழுமையானதுமான பதிப்பு, முதலாவது பதிப்பிலும் பார்க்க இரண்டு மடங்கு நீளத்தில், மொத்தமாக 22,795 அடிகள் கொண்ட ஐம்பது பாடல்களுடன் 1849ல் வெளிவந்தது . 1840-41ல் லொண்ரொத் 'கந்தலேதார்' (Kanteletar) என்னும் யாழிசைப் பாடல் தொகுதி ஒன்றை வெளியிட்டார். இந்த வெளியீடுகளுக்கான முலப் பிரதிகள் இன்னமும் இருந்து, உண்மையான நாடோடிப் பாடல்களின் தொடர்பு பற்றிய ஒரு தெளிவான கருத்தைத் தருகின்றன. நாடோடி இலக்கியத்தில், பல்வேறு உண்மையான சுதந்திரமான கிளைக் கதைகளைத் தொடர்புபடுத்தும் இணையற்ற சுமார் 600 அடிகளை லொண்ரொத் தாமே இயற்றிக் கலேவலாவுக்கு ஒரு முழுமையான அமைப்பையும் வடிவத்தையும் கொடுத்தார்.

கலேவலாவுக்கும் கந்தலேதாருக்கும் அடிப்படையாக உள்ள மூல நாடோடிப் பாடல்களின் ஒரு மாபெரும் தொகுதி Suomen Kansan vanhat runot ('பின்னிஷ மக்களின் பண்டைய பாடல்கள்') என்ற பெயரில் 33 பெரிய பாகங்களாக 1908-1948ல் வெளியிடப்பட்டது. இந்தப் பெரிய செயற்பாடுகூட நூற்றுக்கணக்கான கல்விமான்களாலும் தாமாக முன்வந்த சேவையாளர்களாலும் பின்னிஷ் இலக்கிய மன்றத்தின் ஆவணக் காப்பகத்தில் குவித்து வைக்கப்பட்ட செழிப்புமிக்க சேகரிப்புச் செல்வங்களை வற்றச் செய்ய முடியவில்லை. உலகம் முழுவதிலும் உள்ள பரம்பரை பரம்பரையாக வந்த வாய்மொழிப் பாடல்களின் பழையதும் பெரியதுமான சேகரிப்புகளில் 1831ல் நிறுவப்பட்ட பின்னிஷ் இலக்கிய மன்றமும் ஒன்று. இந்த சேகரிப்புகளில் 1977ல் பின்வருவன அடங்கியிருந்தன: கலேவலாப் பாடல்களின் சீரில் அமைந்த 86,800 பாடல்கள்; மற்றும் சந்த ஒழுங்கில் அமைந்த 129,400 நாடேடிப் பாடல்கள்; 52,400 மந்திரப் பாடல்கள்; 336,000 மந்திரங்கள், நம்பிக்கைகள், சகுனங்கள்; 187,400 விளையாட்டுகள்; 9,300 அர்த்தமற்ற பாடல்களும் புலம்பல்களும்; 103,200 தெய்வீக ஆற்றல் கதைகளும் நினைவாற்றல் கதைகளும்; 77,800 வரலாற்றுக் கதைகளும் உள்ளூர்க் கதைகளும்; 7,700 காரண காரியக் கதைகளும் புராணக் கதைகளும்; 766,500 பழமொழிகள் (ஹெல்சிங்கி பல்கலைக்கழகம் சேகரித்த 1,425,000 திரிபுருப் பழமொழிகளில் இருந்து பெறப்பட்டவை); 117,300 விடுகதைகள்; 23,200 நாடோடிப் பாடல் மெட்டுகள்; 54,000 மானிடவியல் வர்ணனைகள்.

## கலேவலா, பின்லாந்தியரின் தேசீய காவியம்

லொண்ரொத்தின் ஆக்கங்கள், குறிப்பாகக் கலேவலா வெளியீடு 1155 தொடக்கம் 1809 வரை சுவீடிஷ்காரராலும், அதன் பின்னர் (சுவீடிஷ்காரருக்கும் ரஷ்யருக்கும் ஏற்பட்ட போரில் சுவீடிஷ்காரர் தோல்வி கண்ட பின்) 1809ல் இருந்து கடைசியாகச் சுதந்திரம் பெற்ற 1917 வரை ரஷ்ஷியராலும் ஆளப்பட்டு வந்த பின்னிஷ் மக்களின் சுயவிழிப்புணர்விலும் தேசீய உணர்விலும் ஒரு பாரிய விளைபயனை ஏற்படுத்தியது. பழைய பரம்பரைச் செல்வங்களை அழிவிலிருந்து காப்பாற்றி உலக இலக்கியத்துக்கு லொண்ரொத் செய்த சேவையை, பழைய தமிழ்ச் சங்க இலக்கியங்களுக்கு உயிருட்டியவரான பிரபல டாக்டர் உ. வே. சாமிநாதையரின் சேவைக்கு ஒப்பிடலாம். ஜெயன் சிபெலியுஸ் [Jean Sibelius (1865-1957)] அவர்கள் கலேவலாவின் பல பாடல்களை உலகளாவிய இசைக்கு அறிமுகம் செய்தார். இவரால் இசையமைக்கப்பட்டு பின்னிஷ் மக்களின் இதயங்களில் இடம்பெற்ற கலேவலாப் பண்கள், தமிழ் மக்களின் இதயங்களில் இடம்பெற்ற தியாகராஜரின் கீர்த்தனைகளுக்கு இணையாகும். கலேவலா பாடல்கள் மாபெரும் பின்னிஷ் ஓவியர்களுக்கும் அதிகப்படியான உளக்கிளர்ச்சியையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன; இந்த வரிசையில் எல்லாருக்கும் மேலாக அக்செலி கல்லேன்-கல்லேல [Akseli Gallen-Kallela (1865-1931)]வைக் குறிப்பிடலாம். இந்நூலில் பாடல்களின் தொடக்கத்திலும் முடிவிலும் காணப்படும் கொடிவரைப் பின்னணிப் பிரதிமைகள் இவருடைய கலேவலா சித்திர வெளியீட்டில் இருந்து எடுக்கப்பட்டவை; இவருடைய கலேவலா ஓவியங்கள் சுவர்க்கோலங்களில் சில தெரிந்தெடுக்கப்பட்டு வர்ணப்படங்களாக இந்நூலில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன. இன்றைக்கும் ஏரிகளாலும் காடுகளாலும் தனிச் சிறப்பு அளிக்கும் இக்காட்சிகள் பின்லாந்தின் இயற்கை பற்றிய சில அழுத்தமான பதிவுகளை உள்ளத்தில் ஏற்படுத்தத் துணை நிற்கும் என்று நம்பப்படுகிறது; இப்பாடல்களைப் படைக்க ஆதாரமாயிருந்த கலாசாரச் சூழல் பற்றிய ஓவியரின் நோக்கு இந்த ஓவியங்களில் பிரதிபலிக்கின்றது.

## ஆர். சிவலிங்கம் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு

கலேவலா நூலின் கெய்த் பொஸ்லி (Keith Bosley) என்பவரின் ஒரு புதிய ஆங்கில மொழிபெயர்ப்பை 'உலகளாவிய இலக்கியங்கள்' என்ற வரிசையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம் (Oxford University Press) சமீபத்தில் வெளியிட்டுள்ளது (1989). இந்த மொழிபெயர்ப்புடன் இதற்கு முன் வந்த W.F. கிர்பி (W.F. Kirby 1907, மறுபதிப்பு Gallen-Kallela, 1985), F.B மகோன் jr. (F.B. Magoun jr.-1963) என்பவர்களின் மொழிபெயர்ப்புகளும் வேறு சில ஆங்கில மொழிபெயர்ப்புகளும் இந்தத் தமிழாக்கத்துக்குப் பயன்படுத்தபட்டுள்ளன. இதன் தமிழ் மொழிபெயர்ப்பாளரான இலங்கையில் யாழ்பாணத்தைச் சேர்ந்த திரு. ஆர். சிவலிங்கம் ஓர் அனுபவம் நிறைந்த தமிழ் எழுத்தாளர்; 'உதயணன்' என்ற புனைபெயரில் ஏராளமான சிறுகதைகள், நாவல்களைப் படைத்துத் தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவருடைய 'பொன்னான மலரல்லவோ', 'அந்தரங்க கீதம்' ஆகிய இரண்டு நாவல்களை கொழும்பிலுள்ள எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட். நிறுவனம் 'வீரகேசரிப் பிரசுரங்கள்' என்ற வரிசையில் வெளியிட்டன. பத்து வருடங்களுக்கு மேலாகப் பின்லாந்தில் வாழ்ந்து வரும் இவர், பின்னிஷ் மொழியுடனும் பின்னிஷ் கலாசாரத்துடனும் நன்கு பழக்கப்பட்டுவிட்டதால், பின்னிஷ்-கரேலிய மூலப் பிரதியிலிருந்து நேரடியாகத் தமிழில் மொழிபெயர்த்துத் தர முடிந்தது. இவர் தனது நண்பரும் இலங்கை கவிஞருமான எஸ். கிருஷ்ணபிள்ளை ('திமிலைத்துமிலன்') அவர்களின் உதவியுடன் இதன் அமைப்புக்குக் கவனமாக மெருகூட்டியுள்ளார்.

மூல நூலில் இருக்கும் எல்லாக் கவிதைச் சிறப்புகளையும் மொழிபெயர்ப்பில் கொண்டு வருவது சாத்தியமானதல்ல. கலேவலாப் பாடல்கள் நெடில்குறில் ஈரசையாலான நாற்சீரடிகளாக இருக்கின்றன (-v / -vv / -v / -v / ); வழக்கமாக ஒரு சோடியாக அமையும் இத்தகைய இரண்டு அடிகளில், முதல் அடியில் சொல்லப்பட்ட செய்தியையே இரண்டாவது அடி வேறு வார்த்தைகளில் திருப்பிச் சொல்லும். பாடலடியின் கடைசி ஒலியியைபில் அமைவதற்குப் பதிலாக முதலெழுத்துகள் ஒன்றிவரும் மோனைத்தொடையில் பெரும்பாலும் இருக்கின்றன; ஒரு அடியில் உள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரே ஒலியில் தொடங்கும். கடைசியாகக் கூறியதைத் தமிழ்

மொழிபெயர்ப்பில் பின்பற்றக் கூடியதாக இருக்கிறது. பின்னிஷ் மூல நூலிலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் வரும் தொடக்கப் பாடல் அடிகளைக் கீழே தருகிறேன்.

| | |
|---|---|
| Mieleni minun tekevi, | எனதுளத்தில் உள்ளுணர்வு இப்போ விழிக்கிறது |
| aivoni ajattelevi, | எனதுள்ளே உயிர்பெற்று எழுகிறது எண்ணமெல்லாம் |
| la*htea*ni laulamahan, | பாடலையான் பக்குவமாய்ப் பாடுவதற்கு வந்திட்டேன் |
| saa'ani sanelemahan, | பாடலையான் பண்ணுடனே பலபேர்க்கும் பகருகிறேன் |
| sukuvirtta* suoltamahan | சுற்றத்தின் வரலாற்றைச் சுவையாகச் சொல்வதற்கு |
| lajivirtta laulamahan. | உற்றதொரு பேரினத்தின் பழங்கதையை ஓதுதற்கு; |
| Sanat suussani sulavat, | வார்த்தைகளோ வாயினிலே வந்து நெகிழ்கிறது |
| puhe'et putoelevat, | நேர்த்திமிகு சொற்றொடர்கள் நேராய்ச் சொரிகிறது |
| kielelleni kerkia*va*t, | நாவிலே நயமாக நன்றாகப் புரள்கிறது |
| hampahilleni hajoovat. | பாவாகிப் பற்களிடைப் பதமாய் உருள்கிறது. |
| | |
| Veli kulta veikkoseni, | அன்பான சோதரனே, அரியஎன்றன் தோழர்களே! |
| kaunis kasvinkumppalini, | என்னோடே வளர்ந்துயர்ந்த எழில்மிகுந்த நண்பர்களே ! |
| la*he nyt kanssa laulamahan, | இப்போது வந்திடுங்கள் இணைந்தொன்றாய்ப் பாடிடுவோம் |
| saa kera sanelemahan, | நற்சுவையாய்ச் சொல்லுதற்கு நல்லுளத்தைத் தாருங்கள் |
| yhtehen yhyttya*mme | ஒன்றாகக் கூடியுள்ளோம் ஒன்றாகச் சந்தித்தோம் |
| kahta'alta ka*ytya*mme! | நன்றாய் இருவேறு இடமிருந்து நாம் வந்தோம்; |
| Harvoin yhtehen yhymme, | அரிதாகக் கூடிடுவோம அரிதாகச் சந்திப்போம் |
| saamme toinen toisihimme, | அரிதாக ஒருவரினை ஒருவர்நாம் சந்திப்போம் |
| na*illa* raukoilla rajoilla, | வறிதாகிப் போய்வீணே மயங்குகின்ற எல்லைகளில் |
| poloisilla Pohjan mailla. | தெரியும்வட பால்நிலத்தில் செழிப்பிழந்த பூமியின்கண். |
| | |
| Lyo*ka*mme ka*si ka*tehen, | கரத்தோடு கரம்சேர்த்துக் கனிவாகக் கைகோர்த்து |
| sormet sormien lomahan, | விரலோடு விரல்சேர்த்து விரலையழ காய்க்கோர்த்து |
| Lauloaksemme hyvia*, | நன்றாய்நாம் பாடிடுவோம் நயம்திகழப் பாடிடுவோம் |
| parahia pannaksemme, | ஒன்றிச்சீர் கொண்டவற்றை உவகையொடு பாடிடுவோம் |
| kuulla noien kultaisien, | பொன்னான நல்லிதயம் படைத்தவர்கள் கேட்கட்டும் |
| tieta* mielitehtoisien, | இனிமையுறு நன்நெஞ்சம் இயைந்தவர்கள் அறியட்டும் |
| nuorisossa nousevassa, | எழுச்சி மிகுந்தோங்கும் இளைஞர்களின் மத்தியிலும் |
| kansassa kasuavassa: | வளர்ந்துவரும் தேசீய மக்களவர் மத்தியிலும் |
| noita saamia sanoja, | யாமறிந்து கொண்டுள்ள நல்லியல்புச் சொற்களையும் |
| virsia* viritta*mia*, | நமதுளத்தில் ஊறுகின்ற நற்சுவைசேர் கதைகளையும் |
| vyo*lta* vanhan Va*ina*mo*isen, | முதியவைனா மொயினனரைக் கச்சணியி லேயிருந்து |
| alta ahjon Ilmarisen, | இல்மரினன் ஊதுலையின் இயைஆழத் தேயிருந்து |
| pa*a*sta* kalvan Kaukmielen, | தூரநெஞ்சி னன்வாளின் தொடுகூர் முனையிருந்து |
| Joukahaisen jousen tiesta*, | யொவுகாஹை னன்குறுக்கு வில்லினது வழியிருந்து |
| Pohjan peltojen perilta*, | வடபால் நிலத்துற்ற வயல் களிலே தானிருந்து |
| Kalevalan kankahilta. | கலேவலாப் பகுதியதன் கனவெளிக ளூடிருந்து. |

(படம் 5ம் அதன் விளக்கமும் இவ்விடத்தில் தவிர்க்கப்பட்டது)

நாட்டுப் பாடல்களைப் பாடுபவர்கள் தங்கள் நிகழ்ச்சியை அறிமுகம் செய்யப் பயன்படுத்தும் ஒரே மாதிரியான நிலையான சொற்றொடர்களே இந்த ஆரம்ப அடிகள். இருவர் கைகளைக் கோர்த்துக் கொண்டு உடல்களை அக்கம்பக்கமாக ஆட்டியசைத்துப் பாடுவது வழக்கம் (படம் 3). 'கந்தலே' (kantele) என்னும் நரம்பிசைக் கருவியின் இசையும் பக்க வாத்திய இசையாக வழங்கப்பட்டது (படம் 4). இரண்டு பிரதான வகைகளாகக் கூறப்படும் எளிமையான இன்னிசைப் பாடல்களாகக் கலேவலா போன்ற பாடல்கள் பாடப்பட்டன (படம் 5). இன்னிசைப் பாடல்கள் எளிமையாக இருப்பினும்,

திறமையுள்ள பாடகர்கள் அவற்றை தொனி ஏற்றத் தாழ்வற்ற ஓசையிலேயே பலவிதமாக மாற்றியும் திருப்பியும் பாட வல்லவர்கள்.

உண்மையில், தமிழ்நாடு, இலங்கை போன்ற நாடுகளிலும் பார்க்க நில இயலிலும் கலாசாரச் சூழலிலும் முற்றிலும் மாறுபட்ட மொழிபெயர்ப்பு வேலை ஏராளமான சிக்கல்களைத் தரக்கூடிய ஒன்று. நவீன தொலைத்தொடர்பு வளர்ச்சிகள் ஏற்படுவதற்கு முன்னர் பனிமழையும் பனிக்கட்டியில் சறுக்குதலும் தமிழ் மக்கள் முற்றிலும் அறியாத சங்கதிகளாகும் என்பதை இங்கு நினைவுகூர்வோம். அத்துடன் தென் ஆசியாவில் வளராத செடிகளுக்கும் சிறு பழங்களுக்கும் எப்படிப் பெயர் கூறுவது? இத்தகைய பிரச்சனைகள் அனைத்தும் முற்றிலும் தீர்க்கப்படவில்லை; எனினும், இந்தப் பிரச்சனைகள் தொடர்பாக பொதுப் பெயர்களுக்கும் சிக்கலான சொல்லமைப்புகளுக்கும் (மொழிப்பெயர்ப்பில் ஒற்றை இரட்டைப் புள்ளி அடையாளங்கள் இட்டு) நூலின் கடைசியில் முறையே சொற்றொகுதியிலும் விளக்கக் குறிப்புகளிலும் தமிழ் வாசகர்களுக்கு மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் ஆர்வமுள்ள வாசகர்கள் என்பதையும் கலாசாரத்தில் ஈடுபாடுடையவர்கள் என்பதையும் நான் அறிவேன்; இவர்கள், கலேவலாப் பாடல்களின் காலத்துக் காவியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்றவற்றை வைத்திருப்பதற்காகப் பெருமைப் படுபவர்கள். உலகளாவிய இலக்கியங்களில் ஒன்றைச் சிறப்பாகவும் முனைப்பாகவும் அளித்துத் தமிழ் மக்களின் கலாசாரத்துக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் வளமுட்டிய ஆர். சிவலிங்கம் அவர்களின் சேவையைத் தமிழ் மக்கள் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்; அதேபோல பின்னிஷ் மக்களாகிய நாங்களும் இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு மூலம் எங்களுடைய பண்டைய பாரம்பரியச் செல்வம் பூகோளத்தின் மறுபக்கத்தில் இருக்கும் நல்ல இலக்கியப் பிரியர்களை அடைய முடிகிறது என்று மகிழ்ச்சியடைகிறோம். கலேவலா முழுமையாக மொழிபெயர்க்கப்பட்ட வகையில் தமிழ் முப்பதாவது மொழியாகும்; சுருக்கமான மொழிபெயர்ப்புகள் பன்னிரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் வெளியாகியிருக்கின்றன.

## இந்த வேலைத் திட்டத்துக்கு உதவியோர்

ஹெல்சிங்கிப் பல்கலைக்கழகத்தின் ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் தொடர்பான கல்வித் திணைக்களமும் பின்னிஷ் இலக்கிய மன்றமும் [பொதுச் செயலாளர்: உர்போ வெந்தோ (Mr. Urpo Vento)] இணைந்து, கலேவலா தமிழ் வேலைத் திட்டத்தின் நிதியுதவி விண்ணப்பங்களைக் கையாண்டன. திரு. சிவலிங்கத்துக்கு அளிக்கப்பட்ட புலமைப் பரிசிலுக்காகவும் அச்சுவேலை மானியமாக தரப்பட்ட கணிசமான தொகைக்காகவும் பின்லாந்தின் கல்வி அமைச்சுக்கு நன்றி கூறுகிறோம்.

திரு. கலெர்வோ சீக்கலாவுக்கும் (Mr. Kalevaro Siikala) சர்வதேச அலுவல்கள் திணைக்களத்தின் இயக்குனரும் உதவி இயக்குனருமான திரு. முத்தி குஸ்தவ்ஸனுக்கும் (Mr. Matti Gustafson) அத்து டன் கல்வி அலுவல்கள் ஆலோசகர் Ms. மரீத்தா சவோலாவுக்கும் (Ms. Marita Savola) விசேடமான நன்றியைத் தெரிவிக்கிறோம். விசேட தொழில் நிதியை நிர்வகிக்கும் ஹெல்சிங்கி மாநகரமும் ஹெல்சிங்கிப் பல்கலைக்கழகமும் இம்மொழிபெயர்ப்புக்கு முக்கிய ஆதாரமாக இருந்தன. Ms. ஐவி கல்லேன்-கல்லேல (Ms. Aivi Gallen-Kallela), அவருடைய கணவர் டாக்டர் மத்தி சிரேன் (Dr. Matti Siren), 'வெர்னர் ஸொடர்ஸ ஒஸாகே உக்தியோ' (Werner So*derstro*m Osakeyhtio* [WSOY]) என்னும் நிறுவனமும் அதன் நிர்வாக இயக்குனர் டாக்டர் யொர்மா கைமியோவும் (Dr. Jorma Kaimio), முன்னால் இயக்குனர் திரு. ஹன்னு தர்மியோவும் (Mr. Hannu Tarmio), பொர்வோவில் இருக்கும் WSOY அச்சக மேலாளர் திரு. தவுனோ ஹொம்மா (Mr. Tauno Homma)- இவர்கள் எல்லோரும் அக்செலி கல்லேன்-கல்லேல (Akseli Gallen-Kallela)வின் ஓவியங்கள் தொடர்பாக மிகவும் உதவி புரிந்தனர். இந்த நூலின் கணனி அச்சமைப்பையும் சரிபிழைபார்த்தலையும் இந்த அறிமுக உரையின் மொழிபெயர்ப்பையும் திரு சிவலிங்கம் தானே பொறுப்பேற்றுச் செய்து தந்தார். இந்த நூலின் அமைப்பை முற்றுப் படுத்தும் வேலைகளில் திரு. பெத்தரி கொஸ்கிகல்லியோ (Mr. Petteri Koskikallio) பெரிதும் உதவியாக இருந்தார். இந்த நூலைக் கவர்ச்சியாக அச்சிட்டு இலக்கிய பிரியர்களான தமிழ் மக்களுக்கு எட்டக்கூடிய விலையில் சிறப்பாக வெளியிட்ட ஹொங்கொங், ஆல்டனேற்றிவ் அச்சக

(Alternative Press, Hong Kong) அதிபர் திரு. கார்லோ ஸ்கெபெல் (Mr. Kaarlo Schepel)லுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறோம்.

Department of Asian and African Studies,
POB 13 (Meritullinkatu 1),
00014 University of Helsinki,
Finland.
1 November 1994

# என்னுரை

## வணக்கம்

பழைய தமிழ் இலக்கியங்களைப் பின்னிஷ் மொழியில் மொழிபெயர்க்கும் திட்டத்துடன் தான் நான் 1986ல் ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் நியமனம் பெற்றேன். அந்த வகையில் திருக்குறள், சிலப்பதிகாரம் இரண்டிற்குமான எனது பங்களிப்பு ஏறக்குறைய முடிந்த நிலையில், அவற்றை வெளியிடுவதில் ஏற்பட்ட சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக பின்னிஷ் மொழியிலிருந்து தமிழுக்கு ஒரு நூலைக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்தில் 'கலேவலா' என்ற இந்த உலகளாவிய காவியத்தின் தமிழ் மொழிபெயர்ப்புத் தொடங்கப்பட்டது. மூன்றாண்டு கால முழு நேர உழைப்பின் பலன் இந்த மொழிபெயர்ப்பு. பின்னிஷ் மொழியிலிருந்து தமிழ் கூறும் நல்லுலகுக்கு வந்த முதலாவது நூல் என்ற பெருமை இந்த நூலுக்கு உண்டு. அதே நேரம் ஒரு நீண்ட பிற மொழிக் காவியத்தை தமிழாக்கிய மனநிறைவு எனக்கும் உண்டு.

## கலேவலா

இந்த காவியம்பற்றி அறிமுக உரையில் விபரமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. 'கலேவா' என்பது ஒரு முதாதையரின் பெயரிலிருந்து வந்த ஓர் இனத்தவரின் பெயர். கலேவா இனத்தவர் வாழ்ந்த இடத்தைக் கலேவலா என்று அழைப்பர். அதுவே இந்நூலின் பெயருமாயிற்று. வாய் மொழிப்பாடல்களாக இருந்ததாலும் இதில் அடங்கியுள்ள மந்திரப் பாடல்களாலும் இதை ஓர் இதிகாச நூல் என்பர் சிலர். ஆனால் இதை தொகுத்து அளித்த முறையிலும் தற்போதைய அமைப்பிலும் இது இதிகாசம் என்ற எல்லையைக் கடந்து உலக இலக்கியம் என்ற தரத்தைப் பெற்றுவிட்டது என்பர் அறிஞர். பின்லாந்தின் தலைசிறந்த புகழ் பூத்த இசைக்கலைஞரான ஜெயன் சிபெல்லியுஸ் (Jean Sibelius) இப்பாடல்கள் சிலவற்றுக்கு இசையமைத்து உலக அளவில் அரங்கேற்றியதும் இந்தக் காவியம் 'உலக இலக்கியம்' என்ற தரத்தைப் பெற ஒரு காரணமாகும். லண்டன் பீபீசீ (BBC) நிலையம் பல தடவைகள் பல வடிவங்களில் இக்காவியத்தின் பகுதிகளை ஒலிபரப்பி உலகளவில் அறிமுகம் செய்தது. பின்லாந்தைப் பொறுத்த வரையில் இது ஒரு தேசீய காவியமாக அங்கீகாரம் பெற்றது. கல்லூரிகளில் பாட நூலாக ஏற்கப்பட்டது. 1835ல் வெளியான முதலாவது பதிப்பின் முன்னுரையின் திகதியான பெப்ரவரி 28 'கலேவலா தினம்' என அரசால் பிரகடனம் செய்யப்பட்டு ஆண்டுதோறும் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

## தமிழ் மொழிபெயர்ப்பு

இம்மொழிபெயர்ப்பு முற்றுப் பெற்றபொழுது நான் இந்நாட்டுக்கு வந்து பதினோரு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. எனவே இவ்வேலையைத் தொடங்கிய சமயம் எனக்கு இந்நாட்டு வாழ்க்கையும் மொழியும் கலாசாரமும் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டன. அந்த துணிச்சலில் தான் இப்பாரிய பணியைத் தொடங்கினேன். ஆனால் போகப் போகத்தான் அதன் சுமை தெரிந்தது. இந்தியாவிலோ இலங்கையிலோ அன்றேல் உலகின் வேறெந்த முலையிலோ வாழும் ஒரு வாசகருக்கு இம்மொழிபெயர்ப்புக் கிடைக்குமாயின், அவ்வாசகர் முன்பின் கண்டு கேட்டு அறியாத இந்த நாட்டுப் பழக்க வழக்கங்களை, தாவரங்களை, உயிரினங்களைப் பற்றி எவ்வாறு புரிய வைக்கப் போகிறேன் என்ற மலைப்பு ஏற்பட்டது. இன்று இந்த நாட்டில் அறுபது, எழுபது தமிழர்கள் வரையில் நாடெங்கும் சிதறி வாழ்கின்ற போதிலும், அவர்களிடையே தமிழறிவுடையோரைக் காண்பது அரிதாகவே உள்ளது. இங்கு தமிழர்கள் ஒரு நூறு பேர்கூட இல்லாத நிலையில், ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் உள்ள ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் தொடர்பான கல்வித் திணைக்களத்தின் நூல் நிலையத்தைத் தவிர வேறு எங்கேயுமே தமிழ் நூல்கள், அகராதிகள் ஆகியவற்றைப் பெறுவதற்கில்லை. இந்த நூல் நிலையத்திலுள்ள தமிழ் மொழி, கலாசாரம் பற்றிய ஐம்பது, நூறு தமிழ், ஆங்கில நூல்களிலும் பெரும்பாலானவை பழைய பதிப்புகள். அதனால் கடந்த ஐந்து பத்தாண்டுகளில் தமிழ் மொழியில் வழக்குக்கு வந்த சொற்களை அறியும் வாய்ப்பும் எனக்கு மிக மிக அரிது. இந்நிலையில் கலேவலா

காவியம் தொடர்பாக பின்னிஷ் ஆங்கில மொழிகளில் பெறக்கூடிய அத்தனை நூல்களையும் வாங்கிப் பரப்பி வைத்துக்கொண்டு தனியனாய்த் துணிந்து தொடங்கினேன்.

'ஸ்ரோபரி' (strawberry) என்று ஆங்கிலப் பெயரையே சொன்னால், தமிழ்நாட்டில் எங்கோ ஒரு முலையில் வாழும் ஒரு வாசகர் அதை ஒரு பழம் என்று ஊகிக்கலாம்; ஆனால் பலாப்பழம் போன்ற பெரிய பழமா? இலந்தைப்பழம் போன்ற சிறிய பழமா? என்று ஊகிக்க முடியாமல் போகலாம். மாம்பழம் போன்று இனிமையானதா? வாழைப்பழம் போன்று சுவையானதா? அல்லது வேறு ஏதோ ஒரு விதமானதா? என்று உணர முடியாமல் போகலாம். இதற்கு நானே ஒரு புதிய தமிழ்ப் பெயரையும் கண்டுப்பிடித்துக் கூறினால் குழப்பம் இன்னும் அதிகமாகலாம். அதனால் 'ஒரு பழம்' 'ஒரு செடி', 'ஒரு மரம்' என்று மொழிபெயர்ப்பில் ஆங்காங்கு கூறி, அவற்றின் பின்னிஷ் பெயர்கள், ஆங்கிலப் பெயர்கள், அறிவியல் பெயர்கள் அனைத்தையும் 'விளக்கக் குறிப்புகளில்' தந்திருக்கிறேன். தவிர, ஆம்பல், குவளை, அரசு, சிந்தூரம், சூரை, பேரி போன்ற தாவரங்களின் பெயர்களையும் குயில், அன்னம், கீரி போன்ற பிராணிகளின் பெயர்களையும் வாசகர்கள் ஆங்காங்கு காணலாம். ஆனால் நமது நாடுகளில் வளரும் அசல் ஆம்பல் மலரோ அரச மரமோ அல்லது அங்கே வசிக்கும் அதே குயிலோ கீரியோ இங்கேயும் இருக்கிறது என்று கற்பனை செய்ய வேண்டாம். வருடத்தில் ஆறு மாதங்கள் உறைபனியால் முடப்பட்டிருக்கும் இந்நாட்டில் அந்தத் தாவரங்கள் அப்படியே வளர்வதும் சாத்தியமில்லை; அந்த பிராணிகள் வசிப்பதும் சாத்தியமில்லை. இந்த நாட்டின் தட்பவெப்ப நிலையில் வளரக் கூடிய அதே இனத்தைச் சார்ந்த அதே குடும்பத்தைச் சார்ந்த ஒரு மரம் அல்லது பிராணி என்று விளங்கிக் கொள்ளுமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவற்றின் பின்னிஷ் பெயர்கள், ஆங்கிலப் பெயர்கள், அறிவியல் பெயர்களையும் தந்திருக்கிறேன். 'கலேவலா'வின் பின்னிஷ் நூலில் உள்ள சில பின்னஷ் சொற்கள் தற்கால வழக்கில் இல்லை என்பதையும் அவை தற்கால அகராதிகளில் கூட இடம் பெறவில்லை என்பதையும் இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதனால் ஒரே சொல்லை மொழிபெயர்ப்பாளர்கள் வெவ்வேறு விதமாக விளங்கிக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இப்படியான சிலவற்றையும் விளக்கக் குறிப்புகளில் குறிப்பிட்டிருக்கிறேன்.

## சில ஒற்றுமைகள்

நாடு, மொழி, கலை, கலாசாரம் போன்றவற்றால் மக்கள் வேறுபட்டு இருந்தாலும், உலகெல்லாம் வாழும் மனித இனத்திடையே மனத்தளவில் சிந்தனையில் நம்பிக்கைகளில் ஓர் ஒற்றுமை இருப்பதை இக்காவியத்தைப் படித்து அறிந்து கொள்ளலாம். மனத்தின் அடியாழத்தில் இருக்கக்கூடிய ஒருமைப்பாடு மனிதக் குலத்துக்குப் பொதுவானது. கனவு, சகுனம், குறி பார்த்தல் போன்றவை நமது புராணங்களிலும் இலக்கியங்களிலும் வருகின்றன. ஒரு காலத்தில் இவையெல்லாம் எல்லா நாடுகளிலும் எல்லா இனத்தவரிடமும் இருந்தன என்பதற்கு இது ஒரு சான்று. இந்தக் 'கலேவலா' என்னும் காவியத்தில் வரும் சில சம்பவங்கள் இதோ:

லெம்மின்கைனன் என்னும் அஹ்தி வடநாட்டுக்குப் புறப்படுகிறான். அவனுடைய மனைவி குயிலி ஒரு கனவு கண்டு அவனது பயணத்தைத் தடுக்கிறாள். அவள் கனவு கண்டு பயந்தது போலவே அவனுக்கு மரணம் வருகிறது. இந்தக் கட்டத்தில் குயிலியின் கூற்று 'வீரபாண்டிய கட்டப்பொம்மனி'ல் வரும் "போகாதே போகாதே என் கணவா, பொல்லாத சொற்பனம் நானும் கண்டேன்" என்ற அடிகளை நினைவூட்டுகிறது:

"அன்பே, இனியஎன் அஹ்தியே, கேளாய்!
போருக்கு நீயும் புறப்பட வேண்டாம்
துயிலும் பொழுது தோன்றிய தோர்கனா
அமைதியாய் உறங்கும் அப்போ கண்டேன்:

உலைக்களம் போல ஒருநெருப் பெழுந்தது
சுவாலையாய் எழுந்து சுடர்விட் டெரிந்தது
சாளரத் தின்கீழ் சரியாய் வந்தது
பின்சுவர்ப் பக்கமாய்ப் பெரிதாய்ச் சென்றது

உடன்சுழன் றங்கிருந் துள்ளே நுழைந்தது
உக்கிரம் கொண்டது உயர்நீர் வீழ்ச்சிபோல்
தரையிலே இருந்து தாவிக் கூரை
பலகணி பலகணி பரவிச் சென்றது." - பாடல் 12.

தடுத்தது அவனுடைய மனைவி குயிலி மட்டுமல்ல; தாயும் தடுத்தாள். அந்நேரம் தலை சீவிக் கொண்டிருந்த லெம்மின்கைனன், அந்தச் சீப்பைச் சுவரில் எறிந்துவிட்டு, "எனக்கு ஏதாவது கெடுதி நேர்ந்தால் இந்த சீப்பிலிருந்து இரத்தம் வடியும்" என்றான். அப்படியே வடநாட்டில் அவன் இறந்தபோது இங்கே சீப்பிலிருந்து இரத்தம் வடிந்தது. அதைக் கண்ட தாய் பதறிக் கொண்டு புறப்பட்டுப் போனாள்.

அந்தரோ விபுனன் மந்திரப் பாடல்கள் தெரிந்த ஒரு பூதம். தனது வயிற்றில் இருக்கும் வைனாமொயினனை ஒரு ஆவி என்று எண்ணி அதை வெளியேற்ற மந்திரம் செபிக்கிறான். அது ஒரு நீண்ட செபம். இடையே அந்த ஆவி தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்ததற்கு ஓர் அடையாளம் காட்டும்படி இப்படிக் கேட்கிறான்:

அங்குவந் ததற்கோர் அடையா ளம்மிடு
சார்ந்த(தற் கி)ரகசியச் சைகையைக் காட்டு
அடையா ளம்மிடு அதிர்இடி முழக்கமாய்
மின்னலாய் மின்னி வெளியிடு சைகையை
தோட்டக் கதவைத் தொட்டுவீழ்த் துதைத்து
சாளரக் கதவைத் தான்தகர்த் தெறிந்திடு! - பாடல் 17.

தமிழ் மக்களிடையே இருந்த எத்தனையோ வைத்தியம், சோதிடம், வர்மம், மாந்திரீகம் போன்ற அரிய கலைகளில் சில அழிந்துவிட்டன; அல்லது அவை தமது முழுமையை இழந்து குறுகிவிட்டன என்றும் சொல்லலாம். இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மாணவன் தன்னை மிஞ்சிவிடக் கூடாதே என்ற குறுகிய நோக்கில் குரு முழுக் கலையையும் மாணவனுக்குக் கற்பிப்பதில்லை. தன்னை இனம்காட்ட ஏதாவது ஒன்று தனக்கு மட்டும்தான் தெரிந்திருக்க வேண்டும் என்ற சுயநலத்தில் எதையாவது மறைத்து விடுவார்; அந்த மாணவன் தான் பெற்ற மகனாக இருந்தாலும் இந்தச் சுயநலத்துக்கு விதிவிலக்கில்லை. இப்படியே ஆளுக்கொன்றாய் மறைக்கப் போய் அடியோடு அழிந்ததுமுண்டு. சிலர் தமது வயோதிப காலத்தில் சில ஏட்டுச் சுவடிகளை ஆற்றில் விட்டதாகவும் நெருப்பில் எரித்ததாகவும் அறிந்திருக்கிறோம். இக்காவியத்தில் வைனாமொயினன் வாய்மொழியாக வரும் இந்த அடிகளைப் பாருங்கள்:

"... மந்திரச் சொற்கள் மறைத்தல்ஆ காது
பகர்மந் திரமொழி பதுக்குதல் ஆகா(து)
நிலத்துக் கடியிலே புதைத்தலும் ஆகா(து)
மந்திரவாதிகள் மறைந்துபோ னாலும். - பாடல் 17.

இராவணன் யாழ் மீட்டிச் சிவனை மகிழ வைத்தது தொடக்கம் இசை இயற்கையையே நெகிழ வைத்ததுவரை இசையின் சக்தியை நாம் அறிவோம். இந்தக் காவியத்திலும் வைனாமொயினன் 'கந்தலே' என்னும் யாழை மீட்டி இசையின்பம் அளிப்பதை இரண்டு சந்தர்ப்பங்களில் காண்கிறோம். ஆனால் அந்தரோ விபுனன் மந்திரப் பாடல்களைப் பாடும்போது நிகழ்ந்தவை வருமாறு:

பாடலைக் கேட்கப் பகலவன் நின்றனன்
நின்றே தங்க நிலவும் கேட்டது
அலைகள்நீர்ப் பரப்பில் அசையா நின்றன
அவ்விதம் கரையிலும் அலைகள் நின்றன
அருவிகள் ஓடா(து) அமைந்தே நின்றன
நிமிர்நுரை உறுத்தியா நீர்வீழ்ச்(சி) நின்றது

வுவோக்சிநீர் வீழ்ச்சிப் பாய்ச்சலும் நின்றது
அவ்விதம் யோர்தான் ஆறதும் நின்றது. -பாடல் 17.

வைனாமொயினன் இரண்டாவது தடவை கந்தலே என்னும் யாழை மீட்டியபோது நடந்தவை வருமாறு:

மீட்டினன் வைனா மொயினன் விரலால்
கந்தலே நரம்புகள் கனிவா யொலித்தன
பன்மலை முழுங்கின பாறைகள் மோதின
உயர்குன் றங்கள் ஒருங்கசைந் தாடின
கற்பா(றை) வீழ்ந்து கனதிரைத் தெறித்தன
கூழாங் கற்கள் குளிர்புனல் நகர்ந்தன
தேவ தாருகள் திளைத்தன மகிழ்ச்சியில்
கவின்புற் றரைமரக் கட்டைகள் துள்ளின.
கலேவாப் பெண்கள் கவின்மைத் துனிமார்
சித்திரத் தையலின் மத்தியி லிருந்தனர்
நதியினைப் போலவே நங்கையர் விரைந்தனர்
அருவியைப் போலவே அனைவரு மோடினர்
நகைத்த வாயிள நங்கைய ரோடினர்
மகிழ்ந்த மனத்துடன் மனைவியர் கூடினர்
யாழினை மீட்பதை நலமாய்க் கேட்கவே
இசையின் பத்தை இனிதே நுகர.
மருங்கினில் நின்ற மனிதர்கள் அனைவரின்
கரங்களி லிருந்தன கவிழ்த்தவர் தொப்பிகள்;
பக்கம் முதிய பாவையர் யாவரும்
கன்னம் தாங்கிக் கைகளில் நின்றனர்
நிலத்தூன்(றி) முழங்கால் நின்றனர் மைந்தர்
கந்தலே இசையினைக் கவினுறக் கேட்க
இசையின் பத்தை இனிதே நுகர - பாடல் 44.

பாடல் 9ல் வைனாமொயினனுக்குக் காயம் ஏற்பட்டு இரத்தம் பெருகுகிறது. இப்பாடலிலும் பெரும்பகுதி மந்திரம் சொல்வதாகவே அமைந்து விட்டது. இரத்தப் பெருக்கை நிறுத்த மந்திரத்தால் ஆணையிடும் சில அடிகள்:

இரத்தமே நில்முன் எதிர்சுவ ரைப்போல்!
மிகுசோரி ஆறே வேலியைப் போல்நில்!
ஆழியில் நிற்கும் வாளென நிற்பாய்!
கொழுஞ்சே றெழுந்த கோரைப் புல்லென!
வயலிலே உள்ள வரம்பினைப் போல்நில்!
நீர்வீழ்ச்சி யில்உறு நெடுங்கல் எனநில்!

வைனாமொயினன் தான் மணம் செய்வதற்கு வட நாட்டு மங்கையைக் கேட்பதற்காக ஒரு படகில் புறப்பட்டுச் செல்கிறான். இதையறிந்த இல்மரினன் தனும் ஒரு சறுக்கு வண்டியில் விரைகிறான். ஒரே பெண்ணுக்குப் போட்டியிட்ட இரு மாப்பிள்ளைகளும் வழியில் ஒருவரையொருவர் சந்திக்கின்றனர். இருவரது மனநிலையும் எப்படி இருந்திருக்கும்? இதோ இது வைனாமொயினனின் கூற்று:

"நட்புடன் படிக்கை நான்ஒன் றமைப்பேன்
பெண்பல வந்தமாய் பெயர்த்தெழல் இல்லை
அவள்நசைக் கெதிர்மணம் ஆவதும் இல்லை,
அவனுக் கேபெண் அளித்திடல் வேண்டும்
அவனுக் கேஅவள் எவனை விரும்பிலும்,

வெறுப்பி ல்லாமல் மிகநீள் காலம்
பல்லாண் டகவை பகையில் லாமல்." - பாடல் 18.

தூரத்தில் மக்கள் கூட்டமாக வருவதை வடநிலத் தலைவி காண்கிறாள். அவள் தனது அடிமைப் பெண்ணுக்குச் சொல்கிறாள்: "பேரிச் சுள்ளியை எடுத்து நெருப்பிலே போடு. அதிலே இரத்தம் ஊற்றெடுத்தால் எம்மைத் தேடி ஒரு போர் வருகிறது என்று அர்த்தம். தண்ணீர் ஊற்றெடுத்தால், அது போரல்ல; நாங்கள் அமைதியாய் வாழலாம்." ஆனால் இரத்தமோ தண்ணீரோ ஊற்றெடுக்கவில்லை; தேன் சுரந்தது. அதற்கு ஒரு முதியவள் பலன் சொல்கிறாள்: "மணப்பெண்ணைக் கேட்டு மாப்பிள்ளையும் குழுவினரும் வருகிறார்கள்"
என்று. (பாடல் 18)

இரு மாப்பிள்ளைகளும் போட்டி போட்டுக் கொண்டு வருவதை அறிந்த வடநிலத் தலைவி, "முதிய வைனாமொயினன் நிறைந்த செல்வத்துடன் படகில் வந்து கொண்டிருக்கிறான். நீ அவனையே தேர்ந்து மணந்து கொள்!" என்று மகளுக்கு ஆலோசனை கூறுகிறாள். அதற்கு மகளின் மறுமொழி இது:

"எனைச்சுமந் தவளே,ஓ,என் அம்மா!
எனைவளர்த் தவளே,ஓ,என் அன்னாய்!
வருசெல் வந்தனை மணப்பதற் கில்லை
உயர்மா னிடஅறி வொருபொரு ளல்ல
இனிநான் மணப்பது எழில்நுத லுடையோன்
அங்கம் முழுவதும் அழகு படைத்தோன்;
இதுநாள் வரையில் ஏந்திழை யாரையும்
வியன்பொரு ளுக்காய் விற்றதே இல்லை
மங்கையைத் தானமாய் வழங்குதல் நல்லது ... ..." – பாடல் 18.

சுமார் பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்னர் கல்கி அல்லது ஆனந்தவிகடன் தீபாவளி மலரில் படித்த ஒரு தமிழ் நாட்டுப் பாடல் நினைவுக்கு வருகிறது. இது ஒரு தமிழ்த் திரைப்படத்திலும் இடம் பெற்றது. அந்த நாட்டுப் பாடலில் சில அடிகள் இவை தான் என்று நினைக்கிறேன்: "ஊரார் உறங்கையிலே உற்றாரும் தூங்கையிலே நல்ல பாம்பு வேடம் கொண்டு நான் வருவேன் சாமத்திலே; நல்ல பாம்பு வேடம் கொண்டு நடுச்சாமம் வந்தாயானால் ஊர்க்குருவி வேடம் கொண்டு உயரத்தில் பறந்திடுவேன்; ஊர்க்குருவி வேடம் கொண்டு உயரத்தில் பறந்தாயானால் செம்பருந்து வேடம் கொண்டு வெந்தூக்காய்த் தூக்கிடுவேன் ... ..." 'கலேவலா' காவியத்தில் வரும் இந்த அடிகள் எப்படி?

"இருப்பையேல் விடுவியா திங்கிருந் தென்னை
ஆழிமீ னாயெனை யாக்கிடப் பாடுவேன்
ஆழவெண் மீனாய் அலையில்மா றிடுவேன்."

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
"அவ்விடம் உன்னால் அடைந்திட முடியா
கோலோச்சி மீனாய்க் குமரிபின் தொடர்வேன்."

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
"இருப்பையேல் விடுவியா திக்கிருந் தென்னை
அடவியுட் சென்று அங்கே மறைவேன்
கீரியாய்ப் பாறைக் கீழ்க்குழி புகுவேன்."

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
"அவ்விடம் உன்னால் அடைந்திட முடியா
நீர்நாய் வடிவாய் நின்பின் தொடர்வேன்."

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
"இருப்பையேல் விடுவியா திக்கிருந் தென்னை
மேகப்புள் ளாய் உயரமேற் பறப்பேன்
மேகப் பின்புறம் மிகமறைந் திருப்பேன்."
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
"அவ்விடம் உன்னால் அடைந்திட முடியா
கழுகுரு வெடுத்துக் கன்னிபின் தொடர்வேன்." - பாடல் 38

பின்னிஷ் மொழியில் vilja 'வில்யா' என்ற சொல்லுக்குத் தானியம் என்று பொருள். இந்தச் சொல் இதே பொருளில் இன்றும் வழக்கில் இருக்கிறது. ஆனால் 'கலேவலா' காவியத்தில் இச்சொல் பல இடங்களில் 'செல்வம்' என்ற பொதுச் பொருளில்தான் வருகிறது. ஆங்காங்கு இந்தச் செல்வம் என்ன என்று பார்த்தால் பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைத்தான் அது குறிக்கும்: தானியம், கால்நடை, வேட்டையின் இலக்கு. வாழ்க்கைக்கு முக்கியமான தானியம் என்னும் 'வில்யா' மனிதனின் செல்வமாயிற்று. பின்னர் வாழ்க்கைக்கு முக்கியமான எல்லாம் [உ.ம். கால்நடை] செல்வம் vilja என்று கருதப்பட்டது.

தமிழரும் பண்டைக் காலத்தில் கால்நடையைச் செல்வமாகவே கருதினர். மாடு என்றால் செல்வம் என்ற ஒரு பொருளும் உண்டு. அந்தக் காலத்திலேயே செல்வப் பொருளாகக் கால்நடைகள் அமைந்த காரணத்தினாலேயே அது சமுதாயத்திலே போருக்குக் காலாயமைந்தது. பசுவைக் கவருவோரும், கவருவோரைத் தடுக்க முனைபவரும் மூர்க்கமான போரில் ஈடுபட்டனர் என்று சங்க இலக்கியங்கள் சாற்றுகின்றன. இக்காவியத்திலும் வடநிலத் தலைவிக்கும் கலேவலா இனத்தவருக்கும் பகை ஏற்பட்ட கட்டத்தில் கலேவலாப் பகுதியின் பயிர்களையும் கால்நடைகளையும் அழிப்பேன் என்று வடநிலத் தலைவி கூறி அவ்விதமே செய்யவும் முயல்கிறாள். அவள் கூற்று வருமாறு:

"கவின்பசும் புற்றரைக் கரடியை எழுப்புவேன்
பெரியபற் பிராணியை நறுந்தேவ தாருவில்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
கால்நடை யாவையும் கவிழ்த்தே வீழ்த்திட
பசுவினம் முழுதையும் பரப்பிடச் சிதறி;
அனைத்துமக் களையும் அழிப்பேன் நோயினால்
உன்றன் இனத்தை ஒன்றிலா தொழிப்பேன்,
என்றுமே இந்த எழில்நில வுளவரை
அவர்களைப் பற்றி அவனியில் பேச்செழா(து)." - பாடல் 43.

'சம்போ'வை இழந்ததால் ஆத்திரம் கொண்ட வடநிலத் தலைவி கலேவலா மக்களுக்குப் பலவிதமான தொல்லைகளைக் கொடுக்கிறாள். முதலில் வழக்கத்தில் இல்லாத கொடிய நோய்களை அனுப்புகிறாள். அடுத்து ஒரு கரடியை ஏவி விடுகிறாள். முன்றாவதாகச் சூரிய சந்திரர்களைத் திருடி ஒரு மலையில் ஒளித்து விடுகிறாள். அதனால் இரவு வந்தது; இடைவிடா திருந்தது. இருள் நிறைந்தது; இரவதே நீண்டது. கலேவலாப் பகுதியில் கடுமிருளானது. சூரிய சந்திரர்கள் எங்கே மறைந்தனர் என்றே தெரியாத நிலையில், வைனாமொயினன் திருவுளச் சீட்டு முலம் உண்மையை அறிய முற்படுகிறான். பூர்ச்ச மரத்தில் துண்டுகள் சீவி, அவற்றை ஒழுங்காக அடுக்கித் திருப்பி, இறைவனைப் பிரார்த்தித்து உண்மையை அறிகிறான். இது வைனாமொயினன் கூற்று:

"ஆண்டவ ரிடமொரு அனுமதி கேட்கிறேன்
ஆம்,சரி யாம்பதில் அதுவொன் றவசியம்:
இறைவனின் சீட்டே இயம்புவாய் உண்மை
தேவனின் திருவுளச் சீட்டே யுரைப்பாய்
செங்கதிர் எமைவிட் டெங்கே சென்றது
எங்கே மறைந்தது எமைவிட் டேமதி?
என்றுமே வாழ்வில் இல்லையே அவைகள்

இல்லை அவற்றைவான் என்றும் காணுதல்.

உள்ளதை உள்ளவா றுரைப்பாய் சீட்டே!
மனிதனின் விருப்புபோல் மற்றுநீ உரையேல்
உண்மைச் செய்தியை உடனிங் கருள்வாய்
விதித்தது எதுவோ விளம்புவாய் அதனை!
திருவுளச் சீட்டுச் செப்பினால் பொய்யுரை
சீட்டின் மகிமைச் சிறப்பதால் குறையும்
திருவுளச் சீட்டேத் தீயிடை வீசுவர்
மனிதரின் ராசிகள் மற்றெரி படலாம்." -பாடல் 49

இக்காவியத்தில் கடவுள் நம்பிக்கை வெளிப்படையாகவே தெரிகிறது. காடு, கடல், சேற்று நிலம் போன்றவற்றின் சக்திகள் அல்லது அதிபதிகள் சிறு தெய்வங்களாவார். உதாரணமாகக் காட்டின் அதிபதி தப்பியோ; அவரது மனைவி மியெலிக்கி; மகன் நுயீரிக்கி; பெண்கள் தெல்லர்வோவும் தூலிக்கியும். காட்டில் ஒரு சம்பவம் நிகழும் போது இவர்களை அழைத்து முறையிட்டு உதவி கோருவதைக் காணலாம். இப்படியான சிறு தெய்வங்களுக்கு மேல் ஒரு கடவுள் இருக்கிறார். இவரை முன்னாளில் 'உக்கோ' Ukko என்று பின்னிஷ் மொழியில் அழைத்தார்கள். 'உக்கோ' என்றால் கிழவன் என்றும் ukko/nen என்றால் முழக்கம் என்றும் பொருள். ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் Old man என்றே மொழிபெயர்த்திருக்கிறார்கள். கடவுளைக் "கிழவா!" என்று விளிக்க எனது மனம் ஒப்பவில்லை. அத்துடன் பெயரில்லாமல் 'முதியவன்' என்று அழைக்கப்பட்ட சில பாத்திரங்களும் காவியத்தில் இடையிடையே வருகின்றன. எனவே 'முது மனிதன்' என்றும், மனுக் குலத்தின் முதல்வன் என்ற பொருளில் 'மனு முதல்வன்' என்றும் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறேன். முது மனிதன், உயர்மா தெய்வம், காற்றுகளையும் இடி முழக்கங்களையும் ஆள்பவர், நீலக் காலுறையும் குதி உயர்ந்த காலணிகளும் அணிந்து முகில்களின் மேல் நடப்பவர் என்றெல்லாம் கடவுள் வர்ணிக்கப்படுகிறார். வெவ்வேறு இடங்களில் வரும் சில அடிகளைச் சேர்த்துக் கீழே தருகிறேன்:

"ஓ,முது மனிதனே, உயர்மா தெய்வமே!
மனுமா முதல்வனே மாபெரும் தேவே!
வானகம் வதியும் மாமுது தந்தையே
முகிற்குலம் புரக்கும் முதுகா வலனே!
முழங்கும் முகில்களை முழுதாள் சக்தியே
வாயுவின் வழியாய் வாக்குரைப்பவனே!
மேகம் மேலுறும் வியன்சபை யமர்பவர்
உயர்ந்து தெளிந்த உயர்மன் றுறைபவர்
நிலைபெறும் சுவர்க்கமாள் நேசத் தந்தை

வருவாய் அழைக்கும் தருணத் திங்கே
கூவி உழைக்கையில் குறைநீக்க வருக
அனல்உமிழ் அலகுறும் அரியவா ளுடன்வா!
. . . . . . . . . . . . . . . . . . . . . . . ."

நாம் பிரார்த்தனை செய்யும்போது கடவுளிடம் பொதுவாகச் "சிறப்பான வாழ்வு" வேண்டும் என்று கேட்பது வழக்கம். வைனாமொயினனும் ஓரிடத்தில் "சிறப்பான வாழ்வு" வேண்டும் என்று கேட்கிறான்; அடுத்த அடியில் "மேன்மையான மரணம்" வேண்டும் என்றும் கேட்கிறான். இதோ அந்த அடிகள்:

தந்தருள் கர்த்தனே, தந்தருள் இறைவா!
தந்தருள் பாக்கியம் தான்நிறை வாழ்வை
என்றும் சிறப்பாய் இனிதுவாழ் வரத்தை
தந்தருள் மேன்மை தான்மிகு மரணம்
இப்பின் லாந்து இனிமையாம் நாட்டில்

கவின்நிறைந் திடுமிக் கர்யலாப் பகுதியில்.-பாடல் 43.

இந்தக் காவியம் முழுவதிலும் எனக்குப் பிடித்த பகுதி எதுவென்று கேட்டால், இல்மரினனின் திருமணத்தின் பின்னர், மணமகனும் மணமகளும் இல்மரினனின் வீட்டுக்குப் புறப்பட்ட சமயம், அவர்களுக்குத் தனித்தனியே கூறப்பட்ட அறிவுரை தான். அதில் சில அடிகளை மட்டும் இங்கு கூறுவது சாத்தியமில்லை; முழுவதையுமே வாசகர்கள் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னிணைப்புகள், பின்னிணைப்புகள் யாவும் சேர்ந்து சுமார் ஆயிரம் பக்கங்கள் வந்தன. இதை ஓர் உயர்தர பதிப்பாகவும் வெளியிட விரும்பினோம். ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒரு நூல் சிறந்த முறையிலும் பதிப்பிக்கப்பட்டால், ஒரு சராசரி வாசகன் அதை வாங்க முடியாத விலையில் விற்க நேரிடும். அதனால் கொஞ்சம் பெரிய அளவு காகிதத்தில், ஒரு பக்கத்தில் இரண்டு பத்திகளில் (columns) சிறிய எழுத்துகளில் பாடல்களை வெளியிட்டுப் பக்கங்களை 500 அளவில் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இந்நூல் வெளியீட்டுக்கு ஒரு மானியம் கோரி பின்னிஷ் இலக்கிய மன்றத்தையும் அவர்கள் மூலமாகக் கல்வி அமைச்சையும் ஹெல்சிங்கிப் பல்கலைக்கழகம் அணுகியது. நூறு தமிழர்கள் கூட வாழாத இந்த நாட்டில் ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒரு தமிழ் நூலை வெளியிட அவர்கள் உற்சாகத்துடன் உதவிக்கு வந்தார்கள்.

இவ்வளவுக்கும் பின்னணியில் நின்று எல்லாவற்றையும் இயக்கி நிறைவு படுத்தியவர் பேராசிரியர் அஸ்கோ பார்பொலா (Dr. Asko Parpola) அவர்கள். இவரே ஹெல்சிங்கிப் பல்கலைக்கழகத்தின் 'ஆசிய ஆபிரிக்க நாடுகள் தொடர்பான கல்வித் திணைக்கள'த்தின் இந்தியவியல் சம்பந்தப்பட்ட கல்விக்குப் பொறுப்பானவர். இம்மொழிபெயர்ப்புக்கு மனமுவந்து ஓர் அறிமுக உரை எழுதியிருக்கிறார். எனது இனிய நண்பர்.

இந்தக் காவியத்தின் வேறு மொழிபெயர்ப்புகளில் சில உரைநடையிலும் சில கவிதை நடையிலும் வெளிவந்திருக்கின்றன. தமிழிலும் உரைநடையாக வெளியிடுவது என்ற திட்டத்துடன்தான் தொடங்கப்பட்டது. ஆனால் பின்னிஷ் நூல் கவிதையடிகளாக இருந்ததால், அந்தச் சிறிய அடிகளைத் தமிழில் ஆக்கியபோது, தமிழ் மொழிபெயர்ப்பும் இயல்பாகவே கவிதைநடையில் அமைந்துவிட்டது. ஆனால் பல இனப் பாக்களும் கலந்து இருந்தன.

கவிஞர் திமிலைத்துமிலன் இந்த மொழிபெயர்ப்பு முழுவதையும் படித்துப் பார்த்து மரபுக் கவிதைகளாக அமைக்கச் செய்த உதவி மகத்தானது. யாப்பமைதியோடு இருந்த மொழிபெயர்ப்பு அடிகள் தவிர, ஏனைய ஏராளமான அடிகளை யாப்புக்கேற்பத் திருத்திச் சீர்களுள் சரிவர அமைத்துத் தந்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்லாந்துக்கு வந்திருந்த சமயம் இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பின் சில பாடல்களைப் பார்வையிட்டுத் தனது கருத்து களையும் ஆலோசனைகளையும் அன்புடன் கூறினார்.

அலுவகத்துக்குப் போய் மணிக்கூட்டைப் பார்த்துக்கொண்டு எட்டு மணி நேர வேலை செய்திருந்தால் இந்த மொழிபெயர்ப்பு இப்பொழுதும் முடிந்திராது. இதன் பெரும் பகுதியை வீட்டில் இருந்தே செய்து முடித்தேன். சனி, ஞாயிறு, விடுமுறை என்ற ஓய்வில்லாமல் காலை நாலு மணியிலிருந்து இரவு பத்துப் பதினொரு மணிவரை உழைத்த நாட்கள் எத்தனையோ. அப்பொழுதெல்லாம் தேவையான ஒத்து ழைப்பைத் தந்து என்னை ஊக்கப்படுத்திய என் மனைவியையும் மக்களையும் இங்கு கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேற்கூறிய அனைவருக்கும் எனது நன்றியைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

## காணிக்கை

பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் நான் இந்த நாட்டுக்கு வந்தபோது சந்தித்த முதல் மனிதர் இன்னமும் எனது நெஞ்சில் முதலாம் இடத்திலேயே இருக்கிறார். இவர் பல நாடுகளில் பல இன மக்களோடு சேர்ந்து வாழ்ந்து, அன்புக்கும் பண்புக்கும் அர்த்தம் சொல்லிவிட்டு இங்கே வந்தவர். மனித நேயத்தின் இலக்கணத்தைச் செயலில் காட்டுபவர். எனது உள்ளத்தைத் துடைத்துத் தூய்மையாக்கி அதிலே நட்புக்கு நயம் எழுதி வைத்தவர். 'இறைவனே உயர்ந்தவர் ' என்பது கொள்கை. 'எல்லோரும் நல்லவரே' என்பது கோட்பாடு. பிறப்பால் அமெரிக்கர். வயது எழுபது. இவர் பெயர் டாக்டர் லொயிட் சுவான்ஸ (Dr. Lloyd Swantz). இவருக்கு இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பை அந்தரங்க சுத்தியுடன் அர்ப்பணம் செய்கிறேன்.

## முடிவாக ...

மொழி, கலை, கலாசாரத்தால் முற்றிலும் வேறுபட்ட ஒரு காவியத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பதே சிரமம். அதையும் மரபு கவிதையில் சொல்வது மிக மிகச் சிரமம். பின்னிஷ் மொழியில் உள்ள ஒரு வரியை தமிழில் ஒரு சொல்லில் சொல்லக்கூடிய சந்தர்ப்பமும் இருந்தது; ஒரு சொல்லை விளக்கத் தமிழில் நான்கு வரிகள் தேவை என்ற நிலையும் வந்தது. 'விளக்கக் குறிப்புகள்' என்ற பின்னிணைப்பு இவ்வளவு நீளமாக அமைந்ததற்கு இதுவும் ஒரு காரணம். மொழிபெயர்ப்பது, கணனிக்கு ஊட்டுவது, கணனியின் அச்சுப் பிரதிகளில் சரிபிழை பார்ப்பது, திருத்தங்களை செய்வது போன்ற சகல வேலைகளையும் நான் ஒருவனே செய்ய வேண்டியிருந்ததால் ஆங்காங்கு சில பிழைகள் இருக்கலாம். குற்றம் குறைகளை மன்னியுங்கள்; கருத்துகளைக் கூறுங்கள்; திருத்தங்களை எழுதுங்கள்.

அன்புடன்,
ஆர். சிவலிங்கம்
(உதயணன்)

Laakavuorentie 4 C 41,
00970 Helsinki,
Finland.
10.09.1994